(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 376/2023 அ.சா.1

Name : **திரு.** மணிகண்டன்

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.07.2026.

**( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது வைரவம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1வது எதிரியை மட்டும் தான் தெரியும். மீதியுள்ளவர்களை எனக்கு தெரியாது. நான் கருங்காலக்குடி மெயின்ரோட்டில் உள்ள டீக்கடையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது எனது மகன் பெரியகருப்பன் ஓடி வந்து 1வது எதிரி தனசேகரன் கருங்காலக்குடி அரசு மருத்துவமனையில் முடியாமல் இருக்கிறார் என்று என் மகன் சொன்னார். அதன் பின்பு எனது மகன் பெரியகருப்பன் இருசக்கர வாகனத்தில் மேற்படி மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். அதன் பிறகு எனது மகன் பெரியகருப்பன் இறந்த விவரம் எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள என் **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நான் 22.05.2022ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் வீட்டில் இருந்தபோது என் ஊரில் வசிக்கும் என் அண்ணன் சின்னச்சாமி மகன் பாலு என்னிடம் வந்து எனது மகன் பெரியகருப்பன் கருங்காலக்குடி மொல்லமலை சோலைமலை வயல் அருகில் உள்ள ஆண்டிச்சாமி பாறையில் இறந்துகிடப்பதாக அம்பலக்காரன் பட்டியைச் சேர்ந்த அழகு மகன் முருகன், எங்க ஊர் மாயழகன் மகன் செல்வத்திடம் சொல்லி, செல்வம் பாலுவிடம் சொன்னதாக பாலு என்னிடம் சொல்லவும் நானும், எனது அண்ணன் மகன் பாலுவும் உடனே ஆண்டிச்சாமி பாறைக்கு போய் பார்த்தபோது என் மகன் உடம்பில் கன்றிய காயங்களுடன் மூக்கில் இரத்தம் வந்த நிலையில் தலை தெற்காகவும், கால்கள் வடக்கு நோக்கியும் மல்லாக்க இறந்துகிடந்தான் என்றும், அப்போது அங்கு வந்த எனது உடன் பிறந்த தம்பி பொம்மையன் என்னிடம் காலை 11.00 மணியளவில் கம்பூர் ரோட்டில் மொல்லைமலை பக்கம் தனசேகரன் இருசக்கர வாகனத்தின் நடுவில் பெரியகருப்பனை உட்கார வைத்துக்கொண்டு பின்னால் பார்த்தால் அடையாளம் சொல்லக்கூடிய நபரை உட்கார வைத்துக்கொண்டு வந்தவர்களை என் தம்பி எங்க போறீங்க என்று கேட்டதற்கு தனசேகரன் சரக்கு அடிக்க போவதாக சொன்னதாகவும், எனவே தனசேகரனும், இறந்துபோன பெரியகருப்பனும், ஊரில் பிரச்சனையாக இருக்கும்போது இறந்துபோன பெரியகருப்பன் ஏன் தனசேகருடன் போனான் என்று சொன்னதாகவும், 22.05.2022ம் தேதி காலை 08.00 மணியளவில் எனது மகன் கருங்காலக்குடி அரசு மருத்துவமனை அருகே நின்று கொண்டிருந்தபோது தனசேகரன் எனது மகனுக்கு போன் செய்து உன்கிட்ட ஒரு விஷயம் பேசனும் வா என்று கூப்பிட்டதாகவும், அதனால் மாமா நீங்களும் வாங்க என்று கூப்பிட்டதாகவும், நான் காடம்பட்டியில் இருக்கிறேன் எனக்கு வண்டி கிடையாது என காலை 10.00 மணிக்கு ராசாத்தி கருங்காலக்குடியில் பூ விற்கும்போது சொன்னதாக ராசாத்தி என்னிடம் சொன்னார் என்றும், எனவே எனது மகனுக்கும் தனசேகரன் மனைவி முத்துச்செல்விக்கும் தவறான முறையில் பழக்கம் இருந்ததால் தனசேகரன் என் மகன் மீது வன்மம் கொண்டு தனசேகரன் எனது மகனை ஆட்களை வைத்து கொலை செய்துள்ளான் என்றும், எனவே கொலைக்கான காரணத்தை கண்டுபிடித்து தருமாறு காவல்நிலையத்தில்

புகார் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>** <u>இல்லை.</u>

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Sd/- மணிகண்டன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.13 19:18:45 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.